# குருணாகல் பிரதேச சபை

# குருணாகல் மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 28 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 30 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, குருணாகல் பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான குருணாகல் பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிலுவை ஏக்கர் வரி மீதி கணக்கு பட்டோலையின் பிரகாரம் ரூபா 300,649 தொகையாக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 71,334 ஆகக்

கொண்டுவரப்பட்டமையினால் ஆண்டின் இறுதியில் நிலுவை ஏக்கர் வரி மீதி ரூபா 229,315 தொகை குறைத்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) நிலுவை வியாபார அனுமதிப்பத்திர மீதிக் கணக்கு பட்டோலையின் பிரகாரம் ரூபா 944,176 தொகையாக இருந்த போதிலும், நிதிக் கூற்றுக்களில் அது ரூபா 489,987 ஆகக் கொண்டுவரப்பட்டமையினால் ஆண்டின் இறுதியில் நிலுவை வியாபார அனுமதிப் பத்திர மீதி ரூபா 454,189 தொகை குறைவாக கணக்குகளுக்குக் கொண்டுவரப்பட்டிருந்தது.

(இ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பெறவேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 3,917,514 தொகையாக இருந்த போதிலும் பதிவேடுகளின் பிரகாரம் அது ரூபா 1,807,167 ஆனமையினால் பெறவேண்டிய சம்பள மீளளிப்பு ரூபா 2,110,347 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறே நாட்குறிப்புப் பதிவின் மூலம் சம்பள மீளளிப்புக் கணக்கை சரிசெய்வதற்காக திரண்ட நிதியத்தின் ஊடாக ரூபா 5,512,625 தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது.

(ஈ) பதிவேட்டின் பிரகாரம் சம்பள மீளளிப்புப் பெறுவனவுகள் ரூபா 20,451,092 தொகையாக இருந்த போதிலும் நிதிக்கூற்றுக்களில் ரூபா 22,434,388 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் சம்பள மீளளிப்பு ரூபா 1,983,296 தொகை அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(உ) ஓய்வூதியப் பங்களிப்பு நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய ரூபா 5,395,855 தொகையான பங்களிப்புப் பணம் கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிராததுடன் ஆண்டிற்குரிய ரூபா 140,405 தொகை வருமானச் செலவினக் கணக்கிற்குக் கொண்டுவரப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 53,142,176 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 17,896,725 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 28,010,654 ஆக இருந்தது.

### 2.2 நிதிக் கட்டுப்பாடு

பின்வரும் நிதிக் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) மீளய்வாண்டின் இறுதியில் வேலைக் கடன்பட்டோர் மீதி ரூபா 128,699,926 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 51,380,407 தொகையான மீதி மாத்திரம் பட்டோலைகளின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய ரூபா 77,319,519 தொகையான கடன் மீதி தொடர்ச்சியாக தீர்த்துவைக்கப்படாமல் காணப்பட்டதுடன் அதிலும் 2007 - 2011 காலப்பகுதிக்குரிய ரூபா 1,612,041 தொகையான கடன்பட்டோருக்காக மாத்திரம் காலப்பகுப்பாய்வு இனங்காணப்பட்டிருந்தது. அவ்வாறே வேலை முற்பணமாகக் காணப்பட்ட ரூபா 1,763,478 தொகையான மீதி நீண்ட காலமாகக் காணப்படுவதுடன் ஆவணங்களின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 5,036,785 தொகையான வைப்பு மீதியில் 2009 ஆம் ஆண்டின் 03 சந்தர்ப்பங்களில் காப்புறுதி நட்டஈடு கிடைத்த ரூபா 31,421 தொகையும், தேசத்தைக் கட்டியெழுப்பும் நிதியத்திற்கு நன்கொடையாகக் கிடைத்த ரூபா 77,123 தொகையும், உள்ளூராட்சித் திணைக்களத்திடமிருந்து 03 பல்வேறு செயற்திட்டங்களுக்காக 2009 மற்றும் 2010 ஆம் ஆண்டுகளில் கிடைத்திருந்த ரூபா 708,000 தொகையும் தீர்க்கப்படாமல் அல்லது உரிய செயற்பாடுகளில் ஈடுபடுத்தப்படாது காணப்பட்டது. அவ்வாறே வழங்கப்படும் கொடுப்பனவிற்காகச் சமர்ப்பிக்கப்படாத காசோலையாக 2010 ஆம் ஆண்டின் போது வைப்புக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்ட ரூபா 183,075 தொகையான மீதியும், 2011 ஆம் ஆண்டின் போது வைப்புக் கணக்கிற்கு கொண்டுவரப்பட்ட ரூபா 30,000 தொகையான மீதியும் காணப்பட்டது. அவ்வாறே ஏனைய நிறுவனங்களின் வைப்பாக தொடர்ச்சியாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 70,180 தொகையான மீதியும் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது.

**2.3 வருமான நிருவாகம்**

**2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 2,342 | 1,952 | 1,974 |
| (ii) | வாடகை | 2,431 | 2,309 | 435 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,132 | 2,961 | 490 |
| (iv) | ஏனைய வருமானம் | 69,554 | 72,975 | 3,917 |

**2.3.2 ஆதன வரி**

(அ) சபையின் தலைமை அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதன வரி நிலுவை ரூபா 578,234 ஆக இருந்ததுடன் அதில் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 மற்றும் 159 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் விதி 33 - 42 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் 06 வீதிகளுக்குரிய 119 அலகுகளுக்காக ரூபா 312,585 தொகைக்காக மாத்திரம் நிலுவைப் பட்டியல் தயாரிக்கப்பட்டிருந்தது. அதில் 64 இடங்களின் கீழ் ரூபா 258,129 தொகையான நிலுவைக்காக இறுதி அறிவித்தல் வழங்கப்பட்டிருந்ததுடன் 54 அலகுகளுக்குரிய ரூபா 111,329 தொகையான நிலுவை மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அறவிடப்படாத மீதிகளுக்கிடையே

நீண்ட காலமாகக் கொண்டுவரப்படுகின்ற 06 அலகுகளுக்குரிய ரூபா 108,805 தொகை மாத்திரம் நிலுவையாகக் காணப்பட்டது. அவ்வாறே சபை அதிகாரப் பிரதேசத்தில் அபிவிருத்தியடைந்த பிரதேசமாகக் காணப்படுகின்ற நீர்கொழும்பு வீதி, புத்தளம் வீதி, தம்புள்ள வீதிகளுக்குரிய பிரதேசங்களில் ஆதனவரி விதித்து அறவீடு செய்வதற்காக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ஆ) வெல்லவ உப அலுவலகப் பிரதேசத்தில் ஆதனவரி மதிப்பீடு 2001 ஆம் ஆண்டின் பின்னர் மேற்கொள்ளப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 1,068,999 ஆகக் காணப்பட்டது. அதில் ஹிரிபிட்டிய பிரிவுகளில் 04 காலாண்டு தொடக்கம் 147 வரையான இடைவெளியில் நிலுவை ஆதன வரி மீதி ரூபா 93,530 தொகை மற்றும் 5 அரசாங்க சொத்துக்களுக்குரிய ஆதனவரி நிலுவை ரூபா 116,027 ஆகக் காணப்பட்டது. இந்த நிலுவையை அறவீடு செய்து கொள்வதற்காக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 158 - 159 ஆம் பிரிவுகள் மற்றும் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் விதி 33 - 42 வரையான ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 06 ஆதனவரிப் பதிவேடுகள் ஆண்டின் இறுதியில் சமப்படுத்தப்பட்டிராததுடன் உப அலுவலக அதிகாரப் பிரதேசத்திற்கு உரித்தற்றதாக குறிப்பிடப்பட்ட 5 இடங்களுக்காக பற்றுச்சீட்டிடப்பட்ட ரூபா 8,925 தொகையான அளவு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் தீர்க்கப்படாமல் காணப்பட்டது.

### 2.3.3 வியாபார வரி மற்றும் வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) வியாபார அனுமதிப்பத்திரக் கட்டணம் மற்றும் வியாபார வரியின் கீழ் 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாகம்) விதிக்கோவையின் விதி 65 மற்றும் 66 இன் ஏற்பாடுகளின் பிரகாரமும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 150(4) இன் ஏற்பாடுகளின் பிரகாரமும் உரிய காலப்பகுதியின் போது நடவடிக்கை எடுக்கப்படாமையின் காரணமாக ரூபா 342,126 தொகையான நிலுவை காணப்பட்டது.

(ஆ) வியாபார அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக 1015 சந்தர்ப்பங்களின் கீழ் பணம் பெறப்பட்டிருந்த போதிலும் அதில் அனுமதிப்பத்திரம் 481 இடங்களுக்காக மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது.

(இ) இறைச்சி, மீன் விற்பனைக்கான வியாபார உரிமை வாடகைக்கு விடப்பட்ட 22 இடங்களுக்காக வியாபார அனுமதிப் பத்திரம் பெறப்பட்டிருந்தமை வியாபார அனுமதிப்பத்திர பதிவேடுகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. எனினும் அதில் 4 இடங்களுக்காக வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக பணம் செலுத்தப்பட்டிருந்தமை பற்றுச்சீட்டின் பிரகாரம் இனங்காணக்கூடியதாக இருந்த போதிலும் அந்த விடயங்கள் வியாபார அனுமதிப்பத்திர பதிவேடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.4 தொலைபேசி பரிவத்தனை கோபுரங்களுக்கான செயன்முறைக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் அமைக்கப்பட்டுள்ள தொலைபேசி பரிவர்த்தனை கோபுரங்களின் எண்ணிக்கை 30 ஆக இருந்ததுடன் 2010, 2011, 2012 ஆம் ஆண்டுகளின் போது செயன்முறைக் கட்டணமாக ரூபா 600,000 அறவிடப்பட்டிருந்ததுடன் இந்தக் கோபுரங்களுக்காக வருடாந்த வியாபார அனுமதிப்பத்திரம் அல்லது வியாபார வாடகைக் கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.3.5 வாகனத் தரிப்பிடக் கட்டணம்

சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற முச்சக்கர வண்டி, பதிவு செய்யப்பட்டு அல்லது நிறுத்திவைக்கும் இடங்கள் முறையாக மேற்கொள்ளப்படாதிருந்ததுடன், வாகன நிறுத்தி வைத்தல்களுக்குரிய உப விதிகள் விதிக்கப்பட்டு அதன் பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மீளாய்வாண்டிற்குரிய கிடைக்கவேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் இனங்காணப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.3.7 சுற்றாடல் அனுமதிப் பத்திரக் கட்டணம்

2011 ஆம் ஆண்டில் 112 வியாபாரங்களுக்காக சுற்றாடல் அனுமதிப் பத்திரம் வழங்கியதால் ரூபா 151,250 தொகையான வருமானம் உழைக்கப்பட்டிருந்ததுடன் 2012 ஆம் ஆண்டின் போது 71 வியாபாரங்களுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் வழங்கியதால் ரூபா 78,500 தொகை உழைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2011 ஆம் ஆண்டிற்கு ஒப்பீடாக அனுமதிப்பத்திரம் வழங்கிய இடங்களின் எண்ணிக்கை 41

மட்டில் குறைவாகக் காணப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக பரீட்சிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு கண்டறிதல் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 2.4 மிகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பு வாய்ந்த நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டின் போது விதிக்கப்பட்ட மிகைக் கட்டணம் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 95,000 தொகை அறவிடவேண்டியிருந்தது.

## 2.5 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

உள்ளராட்சி நிறுவனங்களின் நகராதிபதிகள், தலைவர்கள் மற்றும் உத்தியோகத்தர்களுக்காக 2012 ஆகஸ்ட் 09 ஆந் திகதி தொடக்கம் 16 ஆந் திகதி வரை வியட்நாம் சுற்றுலாவிற்காக வடமேல் மாகாண உள்ளராட்சி ஆணையாளரின் 2012 யூலை 25 ஆந் திகதிய ஜீஜீஆர்சீ/21/30 ஆம் இலக்க கடிதத்தின் பிரகாரம் அமையக் கொடுப்பனவாக நாளொன்றிற்கு ஐ.அ.டொலர் 30 படி அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த சுற்றுலாவிற்காக தலைவர் மற்றும் செயலாளரினால் அமையக் கொடுப்பனவாக ரூபா 261,362 தொகை மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 2.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

(அ) சபைக்குச் சொந்தமான மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 33,115,434 பெறுமதியான காணி மற்றும் கட்டிடங்கள் காணப்பட்டதுடன் காணி மற்றும் கட்டிடங்கள் காலரீதியாக மெய்மையாய்வு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள காணியில் 12 வருடங்களுக்கு முன் கட்டிடமொன்று நிர்மாணிக்கப்பட்டு சமூர்த்தி வங்கியொன்று பேணப்பட்டிருந்த போதிலும் அந்தக் காணி கையளித்தல் தொடர்பான அல்லது கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கு சமூர்த்தி அதிகாரசபைக்கு வழங்கப்பட்ட அங்கீகாரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் இது தொடர்பாக வாடகைப் பணமும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

## 2.7 சபைக்கு எதிராக அல்லது சபையினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சட்ட நடவடிக்கைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் உரித்து சட்டரீதியாக உறுதிப்படுத்தப்படாமையின் காரணமாக அந்தக் காணிகளைத் தீர்ப்பதற்காக மீளாய்வாண்டின் போது சட்டத்தரணிக் கட்டணம் மற்றும் நில அளவையாளர் கட்டணமாக ரூபா 537,740 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2012 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் காணி தொடர்பாக 08 வழக்குகள் காணப்பட்ட போதிலும் அதில் 03 கோவைகள் மாத்திரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அக்கோவைகளில் வழங்குகளிற்குரிய தற்போதைய தகவல்கள் கோவையிலிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபையினால் வந்துராகல வெரலுகொல்ல மயான நிலத்தில் தகனக் கூடமொன்றை நிர்மாணிக்கும் போது 2007 ஆம் ஆண்டில் அதற்கு எதிராக வழக்குத் தொடரப்பட்டிருந்ததுடன் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளையின் காரணமாக நிர்மாணம் நிறுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் உரிய வழக்கு முடிவடையாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது மாத்திரம் சட்டத்தரணிக் கட்டணமாக ரூபா 173,500 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) குடாகல்கமுவ நாற்சந்தியில் 30 பேர்சஸ் காணித்துண்டு இற்றைக்கு 10 வருடங்களுக்கு முன்னர் பிரதேசத்தின் நபரொருவரினால் ‘‘இலவச மருந்தக மொன்றை நிர்மாணித்தல்’’ இற்காக சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் சபையினால் அந்த நோக்கத்திற்குரிய எந்தச் செயற்பாடுகளும் மேற்கொள்ளப்படாது அந்தக் காணியில் அலுவலகத் தொகுதியும் ஆயுர்வேத மருந்தகமும் நிர்மாணிக்கும் போது காணியைக் கையளித்த நபரின் உறவினரினால் அந்தக் காணியை தமக்குப் பெற்றுத்தரும்படி கோரி 2012 ஆம் ஆண்டின் போது வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

## 2.8 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய பங்களிப்புப் பணம் உரிய பிரகாரம் செலுத்தப்படாமையினால் மீளாய்வாண்டின் இறுதி வரையில் அந்நிதியத்திற்குச் செலுத்த வேண்டிய மீதி ரூபா 5,395,855 ஆக இருந்தது.

அவ்வாறே சபைக்குரிய மாதாந்த தவணைக் கட்டணமாக ரூபா 15,419 படி அந்நிதியத்தினால் அறவிடப்பட்டிருந்த போதிலும் அந்த அறவிடல்கள் சபையின் எந்த ஊழியர்களுக்குரியது என சபை அறிவித்திருக்கவில்லை.

(ஆ) 2009 தொடக்கம் 2011 வரை 1377 கட்டிட விண்ணப்பங்கள் அங்கீகரிக்கப்பட்டு காணப்பட்ட போதிலும் மிளாய்வாண்டின் இறுதி வரையிலும் 122 இடங்களுக்காக மாத்திரமே இணக்கச் சான்றிதழ் வழங்கப்பட்டமையினால் சான்றிதழ் பெறப்படாத இடங்கள் தொடர்பாக கண்டறிந்து நீடித்தல் அல்லது தாமதக் கட்டணம் அறவிடுவதல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(இ) சபையினால் இயந்திர உபகரணங்களை வாடகைக்குப் பொறுவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 5,607,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்ததுடன் அச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்காக உரிய நிறுவனத்துடன் எழுத்து மூல உடன்படிக்கை கைச்சாத்திடப்படவில்லை. அவ்வாறே கூறுவிலைகள் கோரும் போது ஆகக் குறைந்த விலையின் கீழ் தெரிவு செய்யப்பட்ட நிறுவனத்திற்குப் புறம்பாக ரூபா 2,600 மீற்றர் மணிக்கு எரிபொருளுடன் இயந்திர உபகரண அதிகாரசபையிடமிருந்தும் இயந்திரத்தைப் பெற்று மீளாய்வாண்டின் போது அதற்காக ரூபா 1,481,568 தொகையும் செலுத்தப்பட்டிருந்தது.

(ஈ) சபையினால் மீளாய்வாண்டிற்குரிய உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு பெறுமதி சேர் வரி வரித்தொகை (வற்) அனுப்பும் போது வெளித்தரப்பினருக்கு செலுத்தப்படுகின்ற வற்வரி கழிக்கப்படாதிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டதுடன் மீளாய்வாண்டின் சனாவரி தொடக்கம் ஆகஸ்ட் வரையான காலத்திற்குரியதாக அவ்வாறு கழிக்கப்படாத வற் வரிகளின் பெறுமதி ரூபா 1,055,161 ஆகக் காணப்பட்டது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) நிதிக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்